[illegible] வோர்க்குரியதோற்றமேயுல கினி[illegible], வெருவுமேய[illegible] னதுதைகயொருநிலைப்படுத்த வேணை[illegible] ருப்[illegible] டிசேன், பருவநன்னிலையிற்பொ ருந்து[illegible] பாலனைப்புனிதர், வருந்தகைபொரு ந்தும்வான்மியூர்க்கரசேவந்தருள்[illegible] ருயினியே. (கூ)

திரம்[illegible] றுமனைப[illegible] திக்குமமுதமே சிறியேன், [illegible] பெறும்படிநின்றிருப்பதமமைக்கச்சிறிதேனு மனநினைந்திலேயா, பரமபெறுந்தவத்தோர்க்கருணைநிவிளக் கும்பால்வனைதிருவைசெய்சனைய, வரம்பெறும்படி[illegible]ழ்வான் மியூர்க்கரசேவந்தருள்[illegible]ந்தருளினியே. (க0)

திருவருட்சகாயம்.

எண்சீர்விருத்தம்.

திருவருட்சகாயம்.

என்னுயிருக்குயிராயென்னிருகண்ணிற்கொளியா
யிருவினையுநீக்கமுனமெழுந்திடுசற்குருவாய்
மன்னுயிருக்குந்தயைசெய்வான்மியூர்க்கரசே
வஞ்சமனத்தேனுனதுமலர்ப்பதங்காண்பதற்கே
முன்னுளதீஞ்செயல்களுக்கோரளவுபெறாததனை
முற்றிலுந்தீர்த்தருணிலையின் முடிவதனைக்காட்டிப்
பன்னுமெளியேனிதயப்பதியதனிலமரும்
பால்வண்ணனேயெனதுபக்கம்வருவாயே. (க)

நேசிக்குந்தோறுமெந்தனினைவினுக்குணினைவாய்
நின்றிலங்கும்பெருமாவுன்னீடுபுகழினையே
வாசிக்குந்தோறுமருள்வான்மியூர்க்கரசே
வஞ்சமனத்தேனுனதுமலர்ப்பதங்கண்டிடுமுன்
பூசிக்குந்தேவர்களோரளவுபெறாததனை
பொய்யெனநின்றிருக்கருணையெய்திடவுமகிழ்ந்து
பாசிலைகொண்டேனுமுனைப்பணியாததிலையே
பால்வண்ணனேயெனதுபக்கம்வருவாயே. (உ)

ஆகமப்பிரமாணமெனதனுபவத்துங்கலந்த
அன்பேயெவ்வுயிர்க்குமருளரசேயன்பர்கள்பால்
எகவடிவாய்ச்சொலிக்கும்வான்மியூர்க்கிறையே
யிழிந்தமனத்தேனுனதிங்கிணையடிகண்டிடுமுன்
போகமுதலிச்சைகளோரளவுபெறாததனைப்
பொய்யெனக்கண்டிடமகிழ்ந்துபூசிக்கவருள்செய்
பாகமதுவேபெரிதென்றெண்ணிடுமென்முன்னே
பால்வண்ணனேயெனதுபக்கம்வருவாயே. (ங)

திருவருட்குறிப்பு.

கலிவிருத்தம.

திருவருட்சகாயம்.

தந்தையாரிருதாடுணித்தோனுக்கும்
எந்தையேயருளின்னமுதீந்தனை
சிந்தைவாடித்தியங்குகின்றேன்முனம்
வந்தையேலருண்மாட்சிபெரியதே. (௧)

சேயறிந்து தினக்கறியீய்ந்திடும்
தூயனுஞ்சிறுத்தொண்டர்க்கருளினை
நாயனேற்கருணல்கியெழும்பவ
மாயைநீக்கின்மகத்துவமாமரோ. (௨)

கல்லெடுத்தெரிந்தேகழல்போற்றிய
செல்வனுக்குந்திருவருணல்கினை
அல்லலுற்றவடியார்க்கருண்மிகச்
சொல்லினுன்னருள்தூயதுவாகுமே. (௩)

எச்சிலைக்கொடுத்தேகழலேத்திய
அச்சிலைக்குரிசிலுக்கருளண்ணலே
பச்சிலைக்கொடுபோதந்தொழவெனை
வைச்சிலைகிருபைமாண்பிதுவாமரோ. (௪)

போகம்வேண்டிநின்பொன்னடிபோற்றினர்
சோகந்தீர்த்துச்சுகமருளண்ணலே
காகம்போலக்கலக்கவறிவிலேன்
தாகங்க்கீடிற்றானருணீ இயே. (௫)

திருவருட்குறிப்பு.

வில்லெடுத்துனைவீசியவன்பனுக்
கல்லலைத்தவிர்த்தாண்டனையேபழஞ்
சொல்லினுலுனைத்துதித்திடுவேற்குநீ
நல்லருட்பயனல்கிடினன்மையே. (௬)

சிலந்திவண்டினஞ்சிற்றெறும்பாதியும்
விலங்கும்பாம்புமேல்வீடடைந்துற்றன
கலங்குமிவ்வெளியேனுன்கருணையிற்
றுலங்கினுலருள்தோன்றுஞ்சுகமதே. (௭)

பாரிலுன்னருட்பாவைக்குறைசொன்ன
கீரனுக்குங்கிருபையருளினை
தீரமேவுந்திருக்கைலாயவெற்
கோரமேசெயிலுண்மையதாகுமோ. (௮)

மண்முதற்பலவாகியவாசையால்
விண்முதற்பலவாய்விரியும்மனம்
பண்முதற்பெருகும்பததாமரை
உண்முதலுடம்பெங்குமுலாவவே. (௯)

ஓங்கும்வெள்ளிமலைக்கரசேயன்பர்
தீங்குநீக்குஞ்சிவபெருமானினம்
ஈங்குவந்தருளின்பந்தராவிடில்
எங்கலென்றறுமேழைபங்காளனே. (௧௦)

திருவருட்சகாயம்.

சித்தமுதலாம்புலனைச்சேராதுள்ளடக்கிச்
சிவானுபவ நிலையிதெனத்தெரிவித்துள்ளோங்கி
மற்றவர்கட்குங்கருணைசெய்வான்மியூர்க்கரசே
வஞ்சமனத்தேனுனதுமலர்ப்பதங்கண்டிடுமுன்
எத்தனையோகொலைச்செயல்கட்களவுபெறாததனை
எந்தன்மட்டிலும்மகற்றவெழுந்தருளப்பரிந்து
பத்தரனைவோர்க்கருளும்பதியேயென்னிதயப்
பால்வண்ணனேயெனதுபக்கம்வருவாயே. (௪)

கங்குல்பகலாய்க்கரையுங்கடையனுளக்கனியே
காதல்தவிர்த்தேகனவுங்கவலையுமிலாதே
மங்குலெனக்கிருபைசெயும்வான்மியூர்க்கரசே
வஞ்சமனத்தேனுனதுமலர்ப்பதங்கண்டிடுமுன்
சங்கையிலாதேயியற்றுந்தாழ்வனைத்தும்போக்கிச்
சரணாரவிந்தமதிற்றன்பணியச்செய்தென்
பங்குமருள்புரிந்ததற்கிங்கெத்தவமோவென்பாற்
பால்வண்ணனேயெனதுபக்கம்வருவாயே. (௫)

சிலிர்த்தமனத்தேனுனதுதிருவடியையன்பாய்ச்
சிந்தைசெயும்போதுருகிதெவிட்டாததேனே
செலித்ததிருவருட்பேறெத்தொண்டருக்குமருளித்
துரியவனுபவம்விளங்கத்தோற்றுதனிச்சுகமே
வலித்தமனத்தோரறியாவான்மியூர்க்கரசே
வஞ்சமனத்தேனுனதுமலர்ப்பதங்கண்டிடுமுன்
பலித்தவருளேதெந்தன்மட்டினுமோவுரைசெய்
பால்வண்ணனேயெனதுபக்கம்வருவாயே. (௬)

உல்லாசமாகவிறுமாந்திருப்பேனென்றிவ்
வுலகோர்கள்சொல்வதுமெய்யுன்னருட்காணாண
வல்லோர்களடிக்கமலமொன்றதற்கேயல்லால்
வான்மியூர்க்கரசேமற்றவர்களையுமதியே

னெல்லா முானனருாவெ னவறிாதிடு முனபிங்கே [னை
வெபதகனெயெ சசனாசளபாலிகெகவெலாருசொனனே
பலவா றேமமதா கபபதிலி வெசன றனையாா
பாலவணணனெயென பமெ வாயே (எ

பொருசயலா கருமொருமநடிய ிறபொருநதப்
புனிதமு ேய பு ளள
வருதசவெட யாககாமச
வ ட யனமை புல
திருச லெசபாபமாபு ிய த
தேவகிசாமா ட சவரசரமெபெ ந
பருதகமக சனை டையாய
பாலவணணெ மெயென பகசமவருவ யெ (அ

சகமினனெ றறிய தா புநெ டனெனய ந
தூரிய லகசிர னசேசா சே தே
யுகமயுகபா ஙபசிவா ச ரா சே
உறநியவாய ச லெ னமெறன றம
அகமபெருமையில கசே ருப ரிபாசச ன
ஆதியேய டபெ ஙகய எ ங்ப
பகமபெறசவெய தியோ னபத நிர யுககாளாககும
பாலவணணனே னெயெனதுபககமவருவாயே (கூ)

திருகலமனைச்சேனிய வுநெசரிய சேவெனைகருந்
சிசனைதாகிய தாக்கிழ டியெனறுளளாகக
வருக திருவானமியூாககொருவயனமகிழந்தே
வருசயனதசேனினமுயப லாபபதஙகணடிடவே
உருகவருளபுரிநதடியேனுளளமவளாநதே
உணணுமிநசமையமிதிலொருநடையுறுமல்
பருகவடிததேனதருமெமபதியேயிசசமையம
பால்வண்ணனேயெனதுபககம்வருவாயே. (கo)

திருவருட்சகாயம்.

கீழச்சேரி

சாமளவல்லியார்பதிகம்.

வெண்பா.

பூவளருமிக்கபுகழ்வளருங்கீழ்ச்சேரி
மாவளருஞ்சாமளவல்லியின்மே—லாவளருஞ்
செந்தமிழானமாலைசொலச்சேருந்திருவருளே
சந்ததமுஞ்சிந்தைசெய்ததான்.

எண்சீர் விருத்தம்.

திருவருட்சகாயம்.

பூமனைந்து சிறந்துணிந்த புகழுறும்பல் பொருந்திவளர்ந்தக மகிழும் புனிதந்தனே, காமன்வரும் வழிதனிலே கண்டுபோற்றிக் கணைகளரவம் நிறுவிடக் காய்ந்தகாலை, தாமதமி லாதவனுக் குயிரைத் தந்து நற்க திரட்சித்த தாயே நின்னைச், சாமநிறவாத்தாளென்றமரரெல்லாஞ் சரண்செய் மின்னேநின்கிருபை தருகுவாயே. (௧)

கலைமகளிந் திரையுடனே விமலைசேர்ந்து கருணையொடு போற்றிசெயக் களித்தும்பாகத், தலைவியெனப் பரிசளித்து வாழுந்தேவி தண்டுமோயோன் றனக்கருளுந்தயவினளே, சிலைநுதற் சேர் மடவர்வலைதனிற்சிக்காமற் றிருவருட்பேரருண் மகிமைச் சேர்த்தே யென்னை, மலைதலின்றியருளுஞ் சாமளவல்லிப் பேர் வாய்ந்தவளே யன்பருளம் வாழுமாதே. (௨)

முத்தொளிரு முகத்தாளே முனிவரெல்லா முன்னின்று போற்றிசெய முககண்வாய்ந்து, சித்தமகிழ்ந்தருளுகின்ற தேவி நினைத் தினந்துதிக்கத் திருவருளைச் செய்யாதேனோ, கொத்துலவுஞ் சடையாளே குமரன் கையிற குடிகொண்டே யசுரர்துதலத்தைமாய்த்த, பத்தரைமாற்றுத்தங்கப் பசும்பொற்பாதப் பார்வதியே நினருளைப் பாலிப்பாயே. (௩

என்றுமுள்ளாயென்னிரண்டுகண்ணிலுள்ளா யிலங்கியெளி
யேன்றனிடரோதந்தீர்த்தே, யன்றுமுளாயயனரிக்குமப்பாலோ
ங்கு மாதிபராபரனிடத்தேயமர்ந்துளாயென், றின்றுமெவரோத்
திடினுமனத்தினுள்ளே யிருந்தருளுந்தேவதையென்றியாருங்
காணக், குன்றிலுள்ளாயமர்ந்திடுங்கீழச்சேரிக்குட் குடியுமுளா
யுன்பதமேகூறுவோமே. (௪)

செஞ்சொன்மறைத்தீங்கனியேதேனேபாலே திரண்டெ
ழுந்தமாரசமேதெவிட்டாதன்பர், நெஞ்சிலுறைகற்பகமேநி
னைவிலார்பா னீங்கிநிற்குநிர்க்குணமேநின்பாலேழை, கெஞ்சு
இன்றதறியாயோகீழச்சேரிக் கெவனமுளமாதாவேதற்காத்தா
ளுக், கஞ்சலெனவருமரசேயமரரொல்லா மடிவணங்குஞ்சாமள
மேயருள்செய்வாயே. (௫)

காதிலிடுகுழையழகுங்கமலம்போன்ற கண்ணழகுமதுரரசங்
கனிந்துசிந்து, சோதிமுறு வலினழகுந் துடிநேரானசுற
றிடையும்பட்டிசைத்துச்சுகந்தஞ்சார்த்தி, ஆதிதிருமால்முத
லோர்க்கருளுகின்ற அம்மணியே கீழச்சே ரியிலுள் வாழும்,
நீதிநிறைசாமளமேயடியாபக்கம் நின்றபகைநீங்கிடவோர்நிலை
சொல்வாயே. (௬)

பெருந்தகையாய்நினைப்பிரிந்தமுதல்வரன்று பிரமைகொ
ண்டுபேயுடனேநடனமாடி, வருந்துவிதமறிந்தெதிரேவலிமை
கொண்டு வாதாடிச்சூதாட்டால்மயக்கல்கண்டு, திருந்தவேயவ
ரிடத்தோர்பக்கம்பெற்றுச் சித்தர்முதல்முத்தர்கட்குங்கருணை
செய்யும், அருந்தவமேயாறியமர்ந்தவளும்போற்றுமாரணங்கே
யடியர்பகையகற்றுவாயே. (௭)

முன்பொருக்காலிரணியனால்மயக்கங்கொண்ட முராரியு
டன்புராரியையுமுன்போற்செய்தாய், அன்பருக்காய்மகிடனது
செருக்கைத்தீர்த்தா யப்பனென்றும்பாராமற்றக்கன்றன்னைக்,

கொன்றுவரச் சொல்லிவைத்தா யமரர்போற்றக் கூவமெனுங் கீழ்ச்சேரிகுடிகொண்டோங்கி, இன்பமருள்சாமளமேயெல்லைத் தாயுமேத்துகின்றபூங்கொடியேயிதுசெய்வாயே. (அ)

சங்கமெனும்பலகையிலோர்தலைவியானாய் சலந்தரனார்த னையட்டக்கத்தயவதானாய், கங்குல்தனைப்பூரணையாயொருவர்க் காகக் களங்கமறக்காட்டிவைத்தாய்கடையேனுக்கும், மங்குல் பெறவருணாலழியாவண்ணம் வளர்ததிவைத்தாயெக்கியத் தின்வரிசைசேரத், தெங்குலவுகூவமெனுங்கீழ்ச்சேரிச் செங் காத்தாள்வணங்குதிருச்செல்வப்பேறே. (௯)

அட்டதிக்கோர்க்கருளிடுமெண்குணத்தினாளே யன்று லின்மங்களமாயமர்ந்துளாளே, துட்டர்வினைத்திட்டகடுங்கொடு மைகண்டச்சுற்றமெலாங்குட்டம்வரத்துணிந்திட்டாளே, பிட் டினுக்காய் மண்சுமந்துமணவூரவாழும் பிறையணிந்தாரிடத் தெழுந்தபெருமையாளே, திட்டமதாயடியர்பகையகற்றியாட் கொள்தெய்வமெனுஞ்சாமளையேசிந்திப்போமே. (௧0)

திருவருட்சகாயம்.

கலி நிலைத் துறை.

திருவருட்சகாயம்.

கனவிலாயினுமெய்ம்மொழிபுகன்றிடாக்கடையேன்
மனமுமோர்நிலைவருகுமோமலரயன் முதலோர்
தினமும்போற்றிடத்திருவருள்பொழியுஞ்சாமளையே
இனமுமுன் மனதிரங்கிலாதென்னவிங்கிசையே. (௧)

இசைத்திடற்கரிதாகியவெழிற்பதமிரண்டும்
அசைத்திடாவணமிருந்தையேலடிமையின்வருத்தம்
திசைக்கெழாவணஞ்செய்வதாரறிந்துநின்சீர்தி
வசைப்படாதருள்வழங்குகசாமளவல்லீ. (உ)

வல்விரும்பெனும்வஞ்சகமனத்துடன்வாழ்வேற்
கல்லல்தீர்த்திடவன்புவைசாமளவணங்கே
இல்லையென்றிடாதின்னருளிசைப்பையோவெல்லாஞ்
சொல்லருஞ்சுகவாரியிற்றூங்கியசுகமே. (௩)

சுகத்தைநாடியதொண்டனேனின்னடித்துணையை
அகத்திலேபதித்தன்புறம்படிக்கருள்புரிவாய்
முகத்திலேமினுக்கிட்டிடுமாதர்பால்முயன்றே
சகத்தினின்றிடுந்தமியனேற்சருளுஞ்சாமளையே. (௪)

மழையெனப்பொழியாரமுதடியருள்மன்ன
இழையினுண்ணியவிடையுளசாமளாவெழில்சேர்
குழையணிந்திடுமரகதக்குன்றமேகொடியேன்
பிழைகுறித்திடத்தக்கதோபேரருட்டகையே. (௫)

தகைமையொன்றிலாததண்மையருண்மையிற்சார்ந்தே
குகைகடோறும்போய்க்கூடினராடினர்கொடியேன்
நகைசெய்வார்களுக்கிணங்கவேநடந்தவென்மனத்தின்
பகையைத்தீர்த்திடச்சாமளவல்லியேபகராய். (௬)

பகவனார்திருவுருவினைப்பகுந்தனைபடைப்போன்
முகமுலாவினைமாலிருபுறத்தினுமுகந்தோய்
சிகரிசூழ்திருக்கூவமாந்தலத்தினைச்சேர்ந்த
நகரில்வாழ்ந்திடுஞ்சாமளவல்லிநாயகமே. (௭)

நாயன்மாரறுபத்துமூவர்களுக்கும்நலஞ்செய்
தூயனாரிடந்துலங்கிழையாதலாற்றணிந்தே
மாயனார்தொழுமங்கையேசாமளவல்லி
நேயம்வைப்பதிங்கருமையோவடியன்பானீயே. (௮)

நீதமொன்றிலேனியமமுமுணரேனிலைதடுமாறுற்றேன்
வேதன்மாலொடுவிண்ணவர்க்கருளிடும்விமலி
பாதகமுளநாயடியேனையும்பரிந்து
மாதவஞ்செயவரமருள்சாமளவல்லீ. (௯)

வயல்செறிந்திசைமன்னிடுங்கூவங்கீழ்ச்சேரி
இயல்புடனமரொந்தைசாமளவல்லிக்கினிதாய்
நயமுடன்றுதித்தேத்தியபதிகமெந்நாளுஞ்
செயமுடன்வளர்ந்தோங்கிடத்திருவருட்செயவே. (௧௦)

திருவருட்சகாயம்.

சுபமஸ்து

[illegible]

ஸ்ரீ காயநிர்மலேசுவரர்

பதிகம்

[illegible]

ஸ்ரீமத் - ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது,

சி. எஸ். சொக்கலிங்கம்பிள்ளை

[illegible]

[illegible]

பதிப்பிக்கப்பட்டது

அறிக்கை.

இதனால் அன்பர்கள் பலருக்குந் தெரிவிப்பது யாதெனில் இந்நூலாசிரியராகிய **ஸ்ரீமத் ஞானசித்தசுவாமிகள்** ஆங்காங்குலோகோபகாரமாகத் திருவாய் மலர்ந்தருளிய சாஸ்திரங்களையும் ஏனைய சிலபதிகங்களையும் அன்பர்கள் பலவாறு வழூஉக்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருப்பதால இரண்டாவது பதிப்பிலேனுங் கவனித்து அவற்றை வழூதப அச்சிட்டு வெளிப்படுத்துவது அனேகர்க்கும் உபகாரார்த்தமாயிருக்கும்.

சிறப்புப்பாயிரம்.

சேலம்ஜில்லா

ஆத்தூர் தேவஸ்தானங்களின் மணியம்

தஞ்சைமாநகரம்

ஜயாகரு-ஐயர் ... கள் குமாரரா

ம-ள-ள-ஸ்ரீ, கோபாலஐயரவர்கள் இயற்றியது.

கலிவெண்பா

சீமலிநக்குமாதமொடுபயுலகேழினொடும்
டாமுதலாயண்டம்படைத்ததின்பின் - பேர்பலவாய்
ஆக்குவிதநமெல்லாமளிப்பிதமும்பர்களுள்
நீக்கமில்லாதெங்குநிறைவுமறு - நோக்கரிய
நானாதீத ஞானவிந்திவாய்நின்ற
மோனப்பெருக்காகமுற்றுமே - தானாக
எங்குநிறைந்தவிறைவனருளாறபுவியிற்
றங்குநதிருக்குருகூர்தன்னிலே - பொங்குமெழிற்
பூமாதருளாற்புலவரமிககோரமுதாய்த்
தேமாங்கனிமொழியுஞ்சேர்ந்தவே-யோமாதி
யாகமுதலுள்ளபலவெண்ணற்றசித்திபெற்று
மோகமகமாயைமுனிவுமுத-லாகவே
இல்லாதாரெல்லாருமேந்தகிருபைசெயும்
நல்லாரெல்லார்க்குமொருநாதனென - வல்லவனும்
ஞானசித்தனென்றுதிருநாமந்தனைப்படைத்தோன்
மோனமுற்றமுத்தர்யாந்தமுனைகத்-தானுவக்கும்
நிட்டைபுளசிலன்டலகிலயமயர்களின்

சிறப்புப்பாயிரம்.

துட்டத்தனமொடுக்குங்குருநாதா - னிட்டமிக
உள்ளவர்கட்கெல்லாமுதவுவகையிற்றனைதன
கள்ளமுளோருக்கரியாக்கள்ளன்கா - னென்னளவுந்
தீநெறியொன்றில்லான் செந்நெறியைக்கைப்பிடித்தா
மாநெறியுள்ளோர்புகழுமவ்வள்ளல்காண் - தூநெறிசே
பாம்புமபுலியும் பணியாடனதிரு
சாம்பசிவசுந்தரனென்னு - மேம்படுஞ்சீர்ப்
பாண்டியனூர்தேசமதிற்பததிபொடுகோயிலுறும
வேண்டியபதிகம்விரித்துரைத்திட - காண்டருபத
தைததுள்மகிமையனாசெந்நயகாட்டி
நைந்தமனிதர்நயப்பவே - சந்தித்
ததிபதிகொண்டுபத்தர்க்காலயநீரோன்பான்
அதிலமைக்கவேமனத்துளாயநது - விதிபாட்ட
முள்ளவர்பாற்சென்றங்கயகோயகுமயிலைசைபெற்று
துள்ளுநீர்நிறையிலவருஞ்சயக - தெளிவுயன
முத்தயகொழிக்குமண்முத்தாருக்குழுசேலத்
தத்தர்தமைத்தேடிக்கவன்புகொணமு - பித்தமுற
வந்துசிலநாளயகுவைகிபபலமாகதா
சிந்தையுறுதியநதிர்த்தபினபங - கநதமுறக்
கண்கொடுத்துமக்கக்கருகுமவிஷக்காற்றகற்றிய
புண்படுத்துமாநதர்தமைப்போக்கியே - பணபாாநத
சிலர்புகழுந் திருநகர்முனபூசைசெயத
நீலமிடறுடைக்கும் சித்தருக்கு - கோல
சவுந்தரராஜப்பெருமாள் சன்னதிக்குந்தாநு
உவந்தவராவிட்டவுயர்வோன - பவநதவிர்க்கப
பாகநகரரென்னும்பதிக்காசன வேண்டுமகாளால.
ஆகமதிலுள்ளதயரர்தியே - யூகமதாய்
உற்றயிருபேர்கட்குபதேசமுஞ்சொல்லி
நற்றவருசேர்சற்குருவைநாடுங்கா - லுற்றவழிப்
பாதைதனிலார்ப்பரிக்குந்திசையுணாநதச

சீதவபற்கெங்குவலமி செனறபோனா மானத
ஒருபுறததிற்கூடடுமுவனக யெனக்கூடற
பருவதத்திறுத்தரததின் ரஙகா - பெருகுகிலே
எசசமயநதோாகத ாசநதமைநதமகததிகள் வாழ்
பசசைமலைக்கெகியநடா சமுற - வசசிதமாய
முளபமாகதநிகழ்கே பறசயுடனெசெர்று
இனடநதந றைபாமேகிய ர - ன டாகக்
கணடுகை நதுக நயனபமுநருமை வள்ளஙகு
கொணை தெரியாத குணமுடையா - னனெமை
அழயாகவாழ்வசன்னை பமாநத நாசோகோயிற்
படிசசிசைசெந பதிகமபாடி - நெடியவல
கதிரோன்வலலாஙகருதி கிமையோர்
சநதிபமகக நுளருசமானகாண பகதிமனத
மலபாதராக்கேசுரா நமி சையாவி உமடு
வலலபாக்கிளயலன வாமுகத்து.

கட்டளைக்கலிப்பா.

நாலுமூன்றி லொன்றானைப் பணிந்து
நாயகனைநாதானத்தடைபெறறுமே
நாலுமூன்றி னொன்றைக்காத்தவர்
நாயகீகருநதரமேயாகவே
நாலுமூன்றி னொன்றானதுமிலாயலையான்
நமபடுவதிமஞாயமோசொலாய
நாலுமூன்றி னொன்றையுநலகுவாய
நாதனேஞானசித்தநரேந்திரனே.

சாத்துகவி.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

மருவட்டரு மனந்தகிரிவளர்காய
நின்மலன்றன பாசமெருந
திருவடியின் புகழனைத்து மழுக்காய
மனங்கசியச்செய்வே சொற்றன
கருவடர வொட்டாமற் றுரியநிலை
மீதிருந்து கவிஞா யோகத்
தொருவடிவைத் தரிசிக்கும் ஞானசித்த
முனிவரனு முண்மை யோனே.



உ

சிவமயம்.

ஆதூரெனவழங்குந்

திருவனந்தகிரி

ஸ்ரீகாயநின்மலேசுரர்மீது

பதிகம்



திருச்சிற்றம்பலம்

அரியபதத்திற்குமேலாமடி
 தொடருமடியாகவேதோன்றுமடி
பெரியவர்க்கெல்லாம்பெரியவடி
 பேச்சறநிற்போர்க்குணருமடி
அரியயனாதியர்போற்றுமடி
 அன்பினுக்கன்பாயமர்ந்தவடி
திரிபறநிற்போர்க்கருளுமடி
 ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி

அருட்பெரும்பேறாயமர்ந்தவடி
 ஆறங்கமாதிக்கணியாமடி
இருட்கடலில்லாதாரேத்துமடி
 இருமையுமொருமையாயெழுந்தவடி
விருப்புறக்காலனைவீழ்த்துமடி
 விண்ணவர்க்கன்பேவிளைக்குமடி

ஸ்ரீகாயநின்மலேசுரபதிகம்.

தெருட்படுமறிவுக்கறிவாமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (௨)

கண்ணுண்மணியாய்க்கலந்தவடி
கருதுவார்தம்மைமெய்காணுமடி
உண்ணுமுணவுக்குரியவடி
உள்ளும்புறமும்புலாவுமடி
வண்ணத்திருநடமாடுமடி
மறைச்சிலம்பொலித்திடவாய்க்குமடி
திண்ணகிலாண்டமமைவருமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (௩)

குன்றுநிலையிறகுலாவுமடி
கொடியனைகருங்குறைபிரந்தவடி
பொன்றுதத்தலைவாபுகழுமடி
பூசுராசென்னிபுனைந்தவடி
மன்றுடுகினைறபறுளனடி
மறையவனுளமணக்குமடி
சென்றுர்தமமுள்ளதிருக்குமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (௪)

வாடாமலர்கொண்டிறைக்குமடி
மலைமகளாருள்மகிழுமடி
கூடாதிருப்போரைக்கூட்டுமடி
கோடிகாலத்துங்குறையாவடி
தோடார்புறத்தேசுழற்றுமடி
சூழ்ந்துமகிழ்வார்துணையாமடி
தேடார்க்கரிதெனவாகுமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (ரு

பால்வண்ணம்போலபரவுமடி
பச்சையொருபாற்பணியுமடி
நாலவண்ணத்துளேநுழையுமடி
நோக்கிநோக்கர்நுகருமடி
மாலவிடையேறிமகிழுமடி
மலருக்கருங்கண்ணேவணங்குமடி
செம்மலாத்தபார்வையாகாறுமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி (௬)

அலங்காரத்தடியார்க்கருந்தாமடி
கற்பூரவீசிகைகமழுமடி
இலங்கொளகணங்களரும்பேறுமடி
பேச்சற்றிருப்பவர்பேசுமடி
பிலநகைக்கரசையிடறுமடி
வெத்தவதந்தாக்குமிறையாமடி
சிலந்திக்கருளப்புகச்செய்தவடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (எ)

பத்தர்களேத்திப்பரவுமடி
பந்தெண்ணணங்களபணியுமடி
உத்தமருள்ளத்துவக்குமடி
உண்மைக்குமுண்மையுதவுமடி
புத்தியுள்ளோர்க்குட்பொருந்துமடி
பூதலமீதலத்தேத்துமடி
சித்தரொடுமுத்தருஞ்சிந்திக்குமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (அ)

பங்கயம்போலாம்பலவடி
பார்க்கவாயிரத்தெட்டிதழாமடி

ஸ்ரீகாயநின்மலேசுரர்பதிகம்.

தங்கத்தினுமிக்கதாயவடி
சாக்கிரந்தன்னிற்றழைக்குமடி
பொங்கனந்தகிரிநாட்டனடி
புலவரெலாந்தமிழ்போற்றுமடி
செங்கயற்கண்ணிக்கிணங்குமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (௯)

மனவாக்கினுமதியாவடி
வருந்தித்தவஞ்செய்யவாய்க்குமடி
சனத்வாதசாந்தக்கருத்தாமடி
கருணைப்பெருக்காயகமலந்தவடி.
அனந்தகிரிநடுவானவடி
அகிலாண்டவல்லியமாந்தவடி
தினகரனென்றுஞ்சிந்திக்குமடி
ஸ்ரீகாயநின்மலேசுரன்பொன்னடி. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

சுவாமிபெயர்—ஸ்ரீகாயநின்மலேசுரர்
தேவியார்பெயர்—அகிலாண்டவல்லி

வெண்பா.

எங்குநிறைந்திருக்குமேதமிலாசசித்தாகுமா
துங்கக்குருகையினிலேதோன்றினதா—வியக்குமுயர்
சித்தர்களுய்வதமக்குச்செப்பாரோவையமோ
இத்தலத்திலேழையினுமுன்னே.

உ

சிவமயம்.

திருவாமாத்தூர்

அழகியநாதர்மீதும்
முத்தாம்பிகையம்மன்மீதும்
பதிகங்கள்.



இவை

திருககுருகூர்,

ஸ்ரீமத - ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருள,



விழுப்புரம் - சப்ரிஜிஸ்டிரார்

ம. உமாபதிமுதலியாரவர்களால்



சென்னை:—

இந்து யூனியன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டன

விஜய௵-கன்னி௴.

உ

வெண்பா.

எங்கு நிறைந் திருக்கு மேதமிலாச் சித்தர்குழா
துங்கக் குருகையினிற் றோற்று தா—லிங்குமுமா
சித்தர்களும் வந்தெமக்குச் செப்பாரோ வையவோ
இத்தலத்தி லேழையின முனனே.



சாத்துகவிகள்.



திருநெல்வேலி

முருகதாசசுவாமிகளென்றும் திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

ஸ்ரீமத் - தண்டபாணிசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

நேரிசைவெண்பா.

என்கவிமூ வாயிரங்கேட் டிட்டமியன் ஞானசித்தன்
றன்கவியும் வேட்டுத் தரித்தீரால்—நன்கருட்சீ
ரிக்கணமே நல்கிடுவீ ரேந்திழைமுத் தாம்பிகைத்தாய்
பக்கல்வள ரீசா பரிந்து.



அஷ்டாவதானம்,

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

அறுசீர் விருத்தம்.

சுத்தசிவஞானியர்கள்சூழ்மாதைநகரதனைத்தொழுமன்பர்க்குச், சித்தியருளாண்டநாயகர்முத்தாம்பிகையம்மன்சீர்களேத்திப், பத்திவளர்சொற்களினூற்பல்சுவைதேர்பதிகங்கள்பகர்ந்தான்றெய்வ, வித்தகதன்வந்திரிநேர்ஞானசித்ததேசிகனுவிளங்குவோனே.



௪0

மகாவித்துவான்-வேங்கடசுப்புப்பிள்ளைசோதரர்

அரன்வாயல,

தங்கவேற்பிள்ளையவர்களியற்றியது.

கட்டளைக்கலிப்பா.

பற்பலாயிரமாதவர்சூழ்தரும்பம்மைமாதைப்பதியபிராம னைக், கற்பளிக்குமுத்தாம்பிகைததாயொடுங்கண்டுநாடிககனிய முதச்சுவை, சொற்பெருக்கத்தமிழ்ததுதிபாடியேசூடியீடிலெ ண்சித்திமுற்றெய்தினன், நற்பசுநதமிழ்க்கும்பனையன்னசீர் ஞானசித்தசுவாமிமகானரோ.



அஷ்டாவதானம், பூவை - கலியாணசுந்தரமுதலியார


மாணாககா - பொற்களந்தை,

அரங்கநாதப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

பூமருவுநந்தவனம்புடைமருவுந்திருக்குருகைப்பூமனன்பா ங், கோமருவுஞ்சிவயோகஞானசிததமுனிவரன்றுனகூறுநதெ ய்வப், பாமருவுமாதைநகர்ப்பதிகங்களின்பெருமைபகர்தற்கெ ண்ணில், நாமருவுஞ்சேடனுக்குமரிதென்றுனனிலத்தினவில் வார்யாரே.






உ

சிவமயம்.

திருவாமாத்தூர்

அழகியநாதர் பதிகம்.



எண்சீர் விருத்தம்

திருவருட்சகாயம்

பொல்லாத மாயையெனுங் கானறு குளமே
புகுந்தவெனை நனைதருநாம புனலொலாட்டி
எல்லைஞ்செசய யென்றியபு மிறையே யேழை
யிந்திரியப் பாவியநா விழியா நின்றேன்
சொல்லாலும் பொருளாலுங் கேள்வி யாலுந்
தொடாக்கறியா நூவெளியே தூரியத்துற்ற
நல்லார்க்கே யின்னமுதங் கொடுப்பித தோங்கு
நாதனே யாயாத தூா நண்ணு வோனே. (க)

நண்ணுமடி யேற்கருள்செய் யண்ணா நின்றன்
நளினபதம் போற்றிசெயா நாயே னிங்ஙன்
உண்ணுவது முறங்குவதே சுகமாய்க் கொண்ட
வுழுததனே னின்னடியார்க் கூட்டத் தேகிக்
கண்கணீ ராறெனவே கரையி லாத
கடலதென வுடல்சிலிர்த்துக் கருணை நோக்கம்
பண்ணுவது மருமைகொலோ வாமாத தூரிற்
பதிந்தவனே யடிமைமுகம் பார்க்க வாவே. (உ)

வாழ்ந்தார்நின் னருள்தனையே துணையாய்க்கொண்டார்
மலரடிக்கோர் போதேனும் வாழ்த்தி யிங்ஙன்
தாழ்ந்தே யத்திருவருளைச் சார வெய்யத்
தையலர்கட் காளாகித் தளரு முன்பே

சூழ்ந்தேனுன் றிருக்கருணை தனக்கே கோயிற்
சுற்றிவந்தேன் றொண்டுசெய்வேன் சுகமானாலும்
வீழ்ந்தாலு நின்பதமே துணையாய்க் கொள்வேன்
வினையனேன் செய்வதென்னோ விமல வாழ்வே. (௩)

விண்டொருக்கால் முறையிடவே சோகந் தீர்த்து
வீடளித்த ததுபெரிதோ வினையேன் றன்னை
யண்டுபவந் தனையகற்றி யருள்வ தேமிக்
காச்சரிய மாச்சரிய மாமாத தூரிற
கண்டினிய தேனொடுதீம் பாகா யன்பர்
கண்குளிரச் சேவைநல்கிக் கருணை செய்த
எண்குணனே மாதையிடப் பாகம் வைத்த
வெழின்மணியே யினியெனிலு மிரங்குவாயே.

வானவர்கோன் றுயரகற்றி மாயன் போற்ற
வரமருளி மலரயன்றன் வன்மந் தீர்த்துக்
கானமரும் பதஞ்சலிக்குங் கருணை நல்கிக
காமதேன் பூசைசெயக் கதியைக் காட்டித
தீனதயா பரனெனமுன் னயோத்தி வந்த
செயராமன் பூசைசெயு மாமாத்தூரில்
ஈனமுளேன் றுயரகற்ற வெழுந்த செம்பொன்
னிருபதமே குருபதமா மெளிய னேற்கே. (௫)

நோக வடியரொலா நெஞ்சை வைத்தே
நினதடிக்கீ ழானோரிந் நீச னேனைப்
பாராதே யிருந்தனையே லேதுங் காணேன்
பண்ணேறு மொழியாடன் பக்கத்துற்ற
பேராளா பெருவழகா வாமாத்தூரிற்
பிழைதவிர்க்க காட்சிநல்கும் பெரும வென்றன்
னாராமை யறிகிலையோ வருள்க வேண்டு
மடியனே னியாதுநினைத் தறைகு வேனே. (௬)

வேண்டுமடி யெற்கருள்செய் விமலா மிக்க
வேதாந்த சித்தாந்த மிரண்டு மொன்றாய்த்
தூண்டுமெழிற் கைகாட்டுந் தோற்றங் காணுத்
தோஷியே னுன்னருளிற் றுலங்கி னேன்போல்
ஈண்டுமெடுந் துரைக்கமனங் கூசா வண்ண
மென்னையோ வாமாத்தூ ரின்புற் றோங்கும
ஆண்டவனே யானேயான் செய்த குற்ற
மத்தனையு மகற்றவரு ளழக னேயோ. (௩)

அழகுபழுத் தொளிரமுதே யனைத்துளோர்க்கு
மாதயே யடிநாளி லடியேன் றன்னைப்
பழகுவித்தா யுனதடியர் பாதம போற்றிப்
பத்திசெயக கருணைசெய்தாய் பதிந்த பின்புங்
கழகமதி லொருவனெனக காணச செய்தாய்
கடையனே னத்தனையுங் கவனித்துள்ளே
தொழவறியா தேயிழிந்தே னமாத்தூரிற்
றொண்டர்பணிந் தேத்தவருஞ சோதி வாழ்வே.

வாதுபுரிந் தெனைமருட்டு மடவா ருள்ள
மதித்திடுதற் கனந்தவித மருவி மிக்கச்
சூதுபுரிந் தலையுமெளி யேன்பா லுன்றன்
றோற்றமதிற் சற்றளித்துத் தொண்ட னேனைச்
சாதுசங்க நடுவிருத்தி யமுத மீந்து
தற்காக்க வேண்டாவோ சதிரோ முன்னாட்
டேதுசென்ற திருப்பதமின் னமுமோர் காலந்
தோன்றாதோ வாமாத்தூர் துலங்குங் கோவே.

கோகோவென் றேயலருங் கொடியேன் செய்த
குற்றமெலாம பொறுத்தருளிக் குணமு நல்கிப்
பாகோநற் கனிரசமோ வெனவுள் ளூறும்
படிக்கருத மூட்டிவைக்கும் பதியே பண்பார்

மாகோதக் கடல்விடத்தைக் களத்தில் வைத்த
வள்ளலே யாமாத்தூர் வளருந் தேவே
ஓகோவிங் குனதழகைக் காணப் பெற்ற
தொருகோடி மாதவமே யுடைய னேனே. (கO)

திருவருட்சகாயம்.

எழுசீர் விருத்தம்.

திருவருட்சகாயம்.

மதியொடு மிதழி வளங்கொளிர்சடையு
மங்கையோர் பாகமு மகிழ்ந்தே
நதியும்வெண் பொடியு மணிந்தநின் கோலம்
ஞாலமீ தென்றுகண் ணுறுமோ
விதியொடு செங்கண் மால்பணிந் தேற்ற
மிகவருள் புரிபவர் நாயேன்
துதிதனை யிகழா தணிந்திடு மாமாத்
தூரில்வா ழானந்த வமுதே. (க)

தும்பையு மறுகு மத்தமுஞ் சூடித்
துடியிடை யாளுட னொருபால்
உம்பர்கள் வணங்கு பொருளனே யடியே
னுள்ளம்வா ழழகனே யுவந்து
கும்பமா முனியும் பிருங்கியும் பணியக்
கொண்டனைத் தின்னருட் கொடுத்துப
பம்பைமா நதியி னடுவில்வா ழரசே
பார்த்தரு ளானந்த வமுதே. (உ)

வன்னியு மெருக்குங் கொன்றையந் தாரு
மலர்ச்சடைக் கணிந்துள மகிழப
பன்னிய வழகு நாயகி யுடனுன்
பவனியைக் காணுநா ளுளதோ
மன்னிய வாழ்விற் கடைபடு நாயேன
வருத்தமுந் தீர்த்தரு ளெனவே
யுன்னினே னுமாத் தூரில்வா ழரசே
பொருவனே யானந்த வமுதே. (ஈ)

முல்லைசண் பகமு முகிழ்மருக் கொழுந்து
முடிமிசை யணியுமுத் தாம்பாள்
சொல்லையே விரும்புஞ் சுந்தரா பம்பா
நதிதொட ரன்பர்க டொழப்பல
எல்லையு மமைந்த ததனடி வெழுந்த
வெந்தையே யெளியனே னகத்துள்
தொல்லையே தவிர்க்க வேண்டினே னுமாத்
தூரில்வா ழானந்த வமுதே. (௭)

வெண்மணிச் சங்கம் வீசிடும் பம்மை
மேவிடும் பதிதொறும் விரிவாய்த்
தண்மலர் கமழுந் தொண்டைநன் னாட்டிற்
றுயெனு மாதை மா நகர்வாழ்
நண்பனேஞான பானுவே யெளிய
நாயினேற் கின்னருணலகு
மொண்மலர் பதமுத் தாம்பிகைக் கிணங்கு
மொருவனே யானந்த வமுதே. (௮)

கற்பகச் செறிவே கமழ்ந்திடும் பம்பைக்
கரையினி லடியர்கண் காணப்
பொற்கொடி யெனுமுத் தாம்பிகை யுடனே
புகழ்பெறு மாதைமா நகர்பால்
அற்புத வடியர் பொருட்டதா லெனையு
மழைப்பித்த வழகனே யருட்செய்
தற்பராநினது தாடொழு மெளியேன்
றமிழணி யானந்த வமுதே. (௯)

வண்ணமோர் கோடி வளம்பெறு மலரை
மனங்குவித் தெடுத்தணி கின்ற
கண்ணனுங் கமலக் கடவுளுங் காணக்
கர்த்தனே பம்பைமா நதிபால்

எண்ணமே யுடையா ரொக்குலனோனு
மிருவினை யகற்றுமுத் தாம்பாள்
திண்ணமா யொருபாற் சேர்த்தவா மாத்தூர்ச்
செல்வனே யானந்த வமுதே. (எ)

கரும்பினேர் மொழியுங் கமலநேர் பதமுங்
ககனநே ருருவமுங் களிகூருஞ்
சுரும்புநேர் முடியுந்துலங்குமுத் தாம்பாள்
துணைவனே பமபைமா நதியில்
விரும்புமா தவத்தோர்க் கருணிலே விளக்கும
வித்தகா வினையுளே னெனையும
ஒருங்குறத் திருத்தி யாட்கொளு மாமாத்
தூர்வள ரானந்த வமுதே. (அ)

அடுத்தசைந் தியங்குந் தத்துவங் கடந்த
வறிவென வனபர்பா லோங்கித்
தொடுத்தநற் றமிழைத் தாங்கியன் னவர்பாற்
றுயர்தவி ரழகுநா யகியை
எடுத்திரு வுருவு மொன்றென வடிய
ரிதயம்வா ழழகனே பமபை
யடுத்துவா ழாமாத் தூர்க்கொரு வரசே
யருடரு மானந்த வமுதே. (௯)

பிச்சிமந் தாரை நந்தியா திரியும்
பிரியமா யணிந்திடும் பெரியோன்
பச்சிளங் கொடியாள் தமதிட மாகப்
பண்புறும் பம்பைமா நதிபால்
மெச்சிடு மடியர்க் கின்புறச் செய்தும்
வேண்டிய சித்திக ளளிக்கும்
இச்சையே யுடைய வெந்தையே யாமாத்
தூர்வள ரின்பநா யகனே. (௧0)

திருவருட்சகாயம்.

தேவிசகாயம்.

முத்தாம்பிகையம்மன்மீது

இரங்கல்விண்ணப்பம்.

வெண்பா.

திருவருட்சகாயம்.

நெல்லைநகர்க் கறங்கிணற்றி னின்னருளா லாறுவா
அலனுபக லாயநதுதிக்கு மன்பனுக்கும்—எல்லாமுஞ்
செய்யும்வட லூரான் றிருமபிவந்து வாழ்வதற்கும
எய்தவரு டந்திடுமம் மே.

கோச்சகப்பா.

சிததாவெவ் றேங்குந் திடமுருக தாசனுக்கே
முத்தாம பிகையேநீ முன்னமவந்தா லென்னகொலோ
அத்தாவென் றேத்துவட லூரானுக்கு மன்றுசொன்ன
தெத்தாவென் றேநினைந்தா ரின்னும் பாராமுகமோ. (க)

சிவஞான தேசிகன்பாற் றிருப்புகழ்செய் தேயணியுந்
தவமுருக தாசனுக்குந் தயவுசெய்முத் தாம்பிகையே
குவலயமெல் லாம்பரவக் கூர்வடலூர் ராமலிங்கம்
இவர்களுனை யுன்னதலோ வின்னம் பாராமுகமோ. (உ)

எல்லவரு நல்லவரா யின்னமுதங் கொள்ளவருட்
சொல்முருக தாசன்முனந்தோன் றிடுமுத் தாமபிகையே
வல்லமறைச் செல்வரெலாம வாழ்த்தும்வடலூரானங்
கில்லையென வேயுரைத்தா ரின்னும் பாராமுகமோ. (ங)

தனியர்களுக் கேயிரங்குந் தவமுருக தாசனிடங்
கனிவுடனுன் றன்முகத்தைக்காட்டிடுமுத் தாம்பிகையே
முனிவகற்றிச் சன்மார்க்க முறையருளும் ராமலிங்கம்
இனிவருவ தில்லையென்று ரின்னும் பாராமுகமோ. (ச)

எப்பா வலர்க்கு மிசைமுருக தாசனிடந்
துப்பாரு மேனியுடன் தோன்றிடுமுத் தாம்பிகையே
செப்பாத வந்தரங்கஞ் செப்புமவட லூரானிங்
கிப்பாரி லில்லையென்று ரின்னும் பாராமுகமோ. (ரு)

பொருந்தாதார்க் கெல்லாம் புகன்முருக தாசனுளம்
வருந்தாத வண்ணம் வரமருள்முத தாம்பிகையே
அருந்தவஞ்செயுமவடலூர்க் கரசென்றரவ்வறைக்குள
இருந்தால் வருவனென்று ரின்னும் பாராமுகமோ. (சா)

சமயமறிந் தேயுதவுந் தவமுருக தாசனுககே
குமையுமலாத தேனவாயாற் கூறிடுமுத தாம்பிகையே
தமையறிய வேணதுரை தனிவடலூர் ராமலிங்கம
இமையவரோல மீள்வரென்று ரின்னும பாராமுகமோ.

கல்மனதைக் கண்டாய்க் கறைமுருக தாசனுக்கும
வல்லபஞ்சேர்சித்தியெலாமவருகதிடுமுத்தாம்பிகையே
மல்லல்செறியுமவடலூர்மணவறைக்குள்போனவன்பின்
பில்லையுண் டெனப்புகன்று ரின்னும பாராமுகமோ.(அ)

கண்ணீ ராருய்க்கருதுங் கனமுருக தாசனுககும
விண்ணிலிருந் தேயுலவ விரும்பிடுமுத தாமபிகையே
மண்ணிலிருந் தேவானத் தவனையெலா வரவழைக்க
எண்ணும்வட லூரான்மீ தின்னும் பாராமுகமோ. (கூ)

தன்செயலென் றோராறியாத் தவமுருக தாசனுக்கும்
நின்செயலைக் காட்டு நெறியுளமுத தாம்பிகையே
வன்செயலைநீக்குமவடலூரான்சொல்வார்த்தையெலாம
உன்செயலென் றேயறிந்து மோகோ பாராமுகமோ.

பவமகற்றும் பம்பைநதி பக்கமவளர் மாதையினிற்
சிவசிவவென்றேயிறைஞ்சுந்திடமுருகதாசனுக்குந் [ழி
தவம்பயிலுஞ்சன்மார்ககத்தலைவனுக்குஞ்சொன்னமொ
[illegible]வமா யாவதற்கே நான்வணங்கிக் கொண்டேனே

திருவருட்சகாயம.

உ

திருவருட்சகாயம்.

வடதிருமுல்லைவாயில்

பதிகங்கள்.

இவை,

திருக்குருகூர்

ஸ்ரீமத்-ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருள

சென்னை சவுக்கார்பேட்டை

ஆக்டிங் ஸப்ரிஜிஸ்திரார்

ம-ா-ா-ஸ்ரீ

தேனாம்பேட்டை

இராமநாதமுதலியார்

அவர்களால்

சென்னை:

ஹிந்து யூனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

விஜய௵ மார்கழி௴

ம ஈா-ா-பூ

அ௫

திருவாரூர் -

ஆவர்களியறம்.

விருத்தம்.

வா ஜலவுப பொழிலார்வடமுலை
தருளும், மானமருஞசடையெந்தைபிரா
கழற்கன் டனே, தானமொர்தருபண்கள்தழை
தண்டமிழ்மாமாலை, ஞானசித்தக்குருநாதப்புன்
தனயந்துபுனைந்தனனே.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

ஞாதுருஞானஞ்ஞேயந்தோன்றுததுரியநிலை
நாடியைந்தின், மீதுறையுஞ்சிவயோகஞானசித்த
மாமுனியாமேலோன்மோக்க,வேதுதருமவடமுல்
லைநன்மாசிலாமணிநமமிறைவன்மீதில், ஓதுபதி
கங்கடமைக் கற்றவர்களிருமையினு முயர்வார்
தாமே.

ரியற்றிய

பகூழ்மயலொம்வெப்ப
ணங், காராருந்தண்டலைசூழ்
ானசித்தக்கருணைமேகம வாருந்
ன்முத்தருந்திமுல்லைவனத்திறைதாண்
பாரும்புலவரொலாந் துதிபதிகமழையரு
ற்பெய்ததம்மா.

திருமயிலை

வித்துவான

சண்முகம்பிள்ளையவர்களியற்றிய

விருத்தம்.

கல்லைவளைத்தொருசிலையாக்கொண்டபாம்பா
ணமருங்கடவுட்பாலி, முல்லைநகர்க்கருமந்த்தமிழல
ங்கலொருவந்தமொழிந்துசீர்த்தி, யெல்லையிகந்தெ
ய்தினனியா ரொணிற்குருகைசெய்தவமே யென்ன
வந்தோன், றில்லைமன்றினடஞ்சிந்தைவைத்திறை
ஞ்சுமெழின்ஞானசித்தனம்மா.

திருவருட்சகாயம்.

வடதிருமுல்லைவாயில்

பதிகங்கள்.

திருவருட்சகாயம்.

வல்லவர்துதி
முல்லைவாயிலிற்
செல்லவெந்துயர்
இல்லையில்லையே. (௧)

முல்லைவாயிலான
தில்லையாடினன்
வில்லுமேந்தினன
அல்லல்தீர்க்கவே. (௨)

பல்வகைத்தமிழ்
சொல்லுமன்பர்கட்
கெல்லையாந்திரு
முல்லைவாயிலே. (௩)

கல்லையுங்கனை
முல்லைவாயிலான்

சொல்லையேசொல
வில்லைபாவமே. (ச)

மல்லலோங்கிய
முல்லைவாயிலிற்
புல்லயானையும
வெல்லலாகுமே. (ரு)

அல்லிமாமலர்
மெல்லடிக்கிறை
முல்லைவாயிலைச்
சொல்லிவாழ்த்துமின். (சா)

விலவமார்திரு
முல்லைவாயிலார்
செல்வவென்றிடக
கலவிசேருமே. (எ)

மல்லையங்கரன
முல்லைவாயிலில்
ஒல்லையெய்துவோர்
அல்லல்தீர்வரோ. (அ)

சொல்லுமன்பர்காள்
முல்லைவாயிலில்

செல்விடார்க்கருள்
இல்லையில்லையே. (௯)

தொல்லைதீர்த்திடும்
முல்லைவாயிலின்
எல்லைமேவிட
இல்லைதுன்பமே. (௰)

திருவருட்சகாயம்.

திருவருட்சகாயம்.

பூசிக்குமன்பர்க்கிரங்கியன்றேருரைபுன்மொழியும், நேசிக்குநின்கிருபைக்கடலென்னநினைக்குமிந்தத், தோசிக்கும்பொற்றிருத்தாடுணையீந்திடுந்தொண்டரெலாம், வாசிக்குமார்திருமுல்லையினவாயின்மகிழண்ணலே. (௧)

பிறைபரவுந்திருச்செஞ்சடையாயருட் பெற்றவர்பால், நிறைபரவும்படிக்கேகடிப்போய்நிலையோவுணரேன், கறைபரவுங்கருங்கன்மனத்தேற்கருட்காட்சிநல்க, மறைபரவும்வடமுல்லையின்வாயின்மகிழண்ணலே. (௨)

விண்ணிடையாரும்வியப்புறவெள்விடைமீதெழுந்தோர், துண்ணிடையாளொருபாகத்தமைத்து

மேனோக்குவர்தங், கண்ணிடையாகக்கலந்தவனே
யெற்கலந்துகொண்டிடம், மண்ணிடையாள்திருமு
ல்லையின்வாயின்மகிழண்ணலே. (௩)

சேண்பெருகும்மதிற்கோபுரஞ்செங்கனகத்தை
நிகர், தூண்பெருகுந்திருக்கோயில்வாழ்ந்திடுஞ்
சோதியிங்ஙன், சாண்பெருகுஞ்சரந்தனைத்தடு
க்கத்தயங்குகின்றேன், மாண்பெருகும்வடமுல்
லையின்வாயின்மகிழண்ணலே. (௪)

நாடிலனினருட்பெற்றிடுவோர்கட்குள்நண்
புகொண்டுந், தேடிலனன்னவர்பாற்சிறிதேனுநற்சி
ந்தைசெய்தே, கூடிலனின்றிருக்கோயிலினைபுகூ
டாததற்கும், வாடிலனேன்பிறந்தேனமுல்லைவாயி
ன்மகிழண்ணலே. (௫)

தலையால்நடந்திடுவோர்க்கருளசெய்துமித்தா
ரணியில், சிலையாலெறிந்தவர்க்குந்தயைசெய்தநின்
சீர்நினைந்தே, நிலையாமனத்தினனேனுநின்சந்நிதி
நேர்நின்றுளேன, மலையாதருள்புரிமுல்லையின்
வாயின்மகிழண்ணலே. (௬)

சாத்திரமேதுமறியேன்பொற்றுடந்தரமுண
ர்ந்தோர், தோத்திரமேனுஞ்சொலவுணேன்புன்
றொடக்கொழித்தே, நேத்திரத்தானுன்னிலைதெரி

ந்தேகநிலைதந்தோங்கிடவிம், மாத்திரஞ்செய்தருள் வாய்முல்லைவாயின்மகிழண்ணலே. (எ)

ஞானத்தலைவனெலாமபுகழ்ந்தேத்தநடனமிடு, மோனத்தலைவனெனமறையோதிடு முக்கணனே, ஈனத்தலைவனிங்கென்சொலையுஞ் செவியேற்றரு ள்வாய், வானத்தலைவர்புகழ்முல்லைவாயின்மகிழண் ணலே. (அ)

பிட்டுக்குமண்சுமந்தாயெனவேயின்றுபேசவ ருஞ், சிட்டுக்குமனறுபசித்திசிக்கவந்தசெழுஞ்சுட ரே, திட்டுக்குமாதர்க்குஞ்செம்பொன்னசைக்கு தினமுழலென், மட்டுக்கும்வந்தருள்வாய்முல்லை வாயின்மகிழண்ணலே. (கூ)

கயல்பலநின்றுலவுங்கங்கையார்சடைக்காவல வென், மயல்பலவுந்தவிர்த்தாட்கொளவேண்டின ன்மாநிலத்தோர், இயல்பெனவன்கொலையாதிகள் நீக்கியினிதுறச்செய், வயல்செறிந்தோங்கியமுல் லையின்வாயின்மகிழண்ணலே. (கO)

திருவருட்சகாயம்.



திருவருட்சகாயம்.

அண்டர்தொழுதேத்துமொருகைலைவெற்பி
லமர்ந்தவனை யரியயனுக்கரியான்றன்னைத், துண்
டமதிபுனைந்தருளுஞ்சடையான்றன்னைச் சுந்தரர்க்
குஞ்சந்துசென்றதுணையினானைக், கண்டமதில்விட
த்தடக்கிக்காமன்றனைக்காய்ந்தவனைக் கடையனு
ள்ளக்கருததினானை, வண்டலருமவடமுல்லைவாயி
ல்மேவு மாசிலாமணிதனையேவாழ்த்துவோமே.

பரமெனச்சொல்தலைவர்புகழ்கைலைவெற்
பிற் படைத்தல்முதலைந்தொழிலுமபகர்ந்துளானை
க், கரமதில்மானுடையானைககனலான்றன்னைக்கங்
கைதங்குஞ்சடையானைக்கமலைதாதான்றன், சிரமொ
ருகையுடையானைச்சிறியேனவேண்டுஞ், சித்தியெ
லாமளிப்பானைததெவிட்டாதென்றும் வரமருளும்
வடமுல்லைவாயில்மேவு, மாசிலாமணிதனையேவா
ழ்த்துவோமே. (உ)

சிந்திக்குஞ்செல்வரமர்கைலைவெற்பிற் றேவி
யுளமகிழவமர்தெய்வந்தன்னை, நந்திக்கும்பரதமு
னம்நடித்துளானை நால்வேதப்புகழானைநால்வர்
போற்றப், புந்திக்குள்ளமர்ந்தானைப்புலையேற்கு
ற்ற புன்மையெலாந்தவிர்ப்பானைப்புலவரெல்லாம்,

வந்திக்கும்வடமுல்லைவாயில்மேவு மாசிலாமணித னையேவாழ்த்துவோமே. (௩)

கணங்களெல்லாம் புகழுமெழிற்கைலைவெற்பிற் கலைமகளிந்திரை வணங்குங்கவுரிக்கென்றும, இண ங்கினனைப்புரிசடையிற்கொன்றையந்தா ரிசைத் தவனையிளமதியொன்றேற்றுளானை, வணங்கினர் க்கும்வணங்கார்க்கும்பொதுவுற்றன்றோர் மதிப் படிநின்றருள்செயருள்வாரியானை, மணங்கமழும் வடமுல்லைவாயில்மேவு மாசிலாமணிதனையேவாழ் த்துவோமே. (௪)

கொஞ்சுதிருவருட்குமரன்றன்பால்மிக்கக்குறு நகைகொண்டிடுங்கைலைக்குரியோன்றன்னைப், பிஞ் சுமதியணிந்தவனைக்குருந்தின்மேவும்பிஞ்ஞகனைப் பிட்டினுக்குழவந்துளானைப, பஞ்சுறுமபாடெல்லாம் ப்புவியிலடியேன்பட்டபாட்டை யெல்லாந்தீர்த்த ருளும்பதியானை, மஞ்சுலவுமவடமுல்லைவாயி ல்மேவு மாசிலாமணிதனையேவாழ்த்துவோமே.

கண்ணனயன்றேவர்தொழுங்கைலைவெற்பிற் கரியுரித்துப்போர்த்துநின்றகடவுளானைப், பெண் ணொருபாலுடையானைவிடையான்றன்னைப் பெ ண்டனக்காய்த்தூதுசென்றபெயருளானை, சுண்

ணமணிந்தன்றுபுரந்தொலைத்துளானைத் துயருடை யேனுள்ளகத்தேதோன்றினானை, வண்ணமிகும்வ டமுல்லைவாயில்மேவு மாசிலாமணிதனையேவாழ்த் துவோமே. (௬)

கந்தமுறுங்கூவிளஞ்சண்பகமந்தாரங்கவின்கை லைக் குரியபெருங்கடவுளானைப், பந்தணையதனத் தாள்தன்பாகமார்ந்தபசுபதியைப் பணிபவர்தம் பாவந்தீர்த்துச், சிந்தையதினடிமுடிக்குந்தெய் வந்தன்னைச்சிறியவனேற்குங்கருணைச் சிறிதுநல்கி, வந்தருளும்வடமுல்லைவாயில்மேவு மாசிலாமணித னையேவாழ்த்துவோமே. (௭)

நல்லோரெல்லாம்புகழுங்கைலைவெற்பினன்மு கன் மாலோடமரர்நயந்துளானை, யெல்லார்க்குந் தாதையெனவிருந்துளானையெண்ணரிய பூதகணமி சைத்துளானைக், கல்லாதேனெனதகத்துங்கனிந் துளானைக் கன்னியையோர்புறமதனிற்கலந்துளா னை, வல்லோர்வந்திறைஞ்சுவடமுல்லைவாயில் மாசி லாமணிதனையேவாழ்த்துவோமே. (௮)

மலிந்தபல்வரவமுந்தன்மார்பிற்றுங்கியங்கை மகிழ்ந்திடும் வெள்ளிமலையான்றன்னை, நலிந்தபல தேவர்கட்காய்வன்னஞ்சுண்டு நான்மறை கட்கறி யாதுநடித்துளானை,மெலிந்தவடியேனுளத்துமமர்

தேவேணவிதமருளிவிரைமலர்த்தாட்கன்புசெய்ய, வழிந்தழைக்கும் வடமுல்லைவாயில்மேவு மாசிலா மணிதனையேவாழ்த்துவோமே. (கூ)

வெருவிக்குமபுலியதளொன்றரையிற்சாத்தி விரிசடையோட விர்கயிலைவெற்புளானைக், குருவி க்குந்திருவருள்செய்குணத்தினனைக் குனிந்தசிலை யேயிருக்கப்புரத்தைதவீழ்த்திக், கெருவிக்குமமன் றனைக்கிழுதைததுளானைக் கெடுமதியேன் றனக்கு மருட்கிருபைநல்கி, வருவிக்குமவடமுல்லைவாயில் மேவு மாசிலாமணிதனையேவாழ்த்துவோமே.(கO)

திருவருட்சகாயம்.

மெய்ப்பொருள் விளக்கம்.

திருவருட்சகாயம.

அவனிபுளநின்னருட்டுணையேதுணையெனக்கொண் டிந்த வகிலமிசையுள்ளதொழிலத்தனையுமறந்தே ன், அன்புளவன்னெஞ்சகர்தஞ்சொல்வினையுங்கே ளேன்துரியவனுபவம் விளங்கத்தொண்டுசெயாநி ன்றேனை, என்புளிருந்தியாவுமுணர்கின்றபெருமா னேயாரொருத்தனிவ்வுலகிலிடைஞ்சலுறலமுகோ,

மூன்புளகல்லோர்கடமக்கனந்தகலஞ் செய்தமுத
லேசற்றிரங்கிடவென்முன்புவருவாயே. (க)

சிவமெனும்பேரொன்றுபலவாகிவிரிந்தெழுந்தே
சென்றதுபோலொடுங்கியமர் சிற்சபையின்கண்
ணே, தவமுடையார்க்கிரங்கவருட்டாரகமாயன்
பர் தன்னிலைபிற்றுணுகித்தன்னையுணர்ந்ததன்பின்,
பவமகற்றவெழுந்தபசுபதியேயிங்கடியேன் பழு
தனைத்துந் தீர்த்துனதுபதத்தருகிற்சேர்க்க, உவ
ந்துகடைக்கண்ணோககஞ் சிறிதளிக்கவேண்டும்
உண்மையிதற்கையமிலையுணர்த்தவருவாயே. (உ)

வேதாந்தஞ்சித்தாந்தமிரண்டினுக்கும்பொது
வாய்விளங்குசிவானந்தமெனுஞ்சமரசததைத்தொ
டர்ந்து, நாதாந்தமுதற்பலவந்தங்களினுமன்பர்
நலங்கொளச்செய்தன்னவர்பால் நடனமிடும்பெரு
மா, பாதாதிகேசமுதற்பலங்களினைச்சுமந்தேதன்
பன்னிரண்டினிலையுணர்ந்தும் பதியவறியகிலேன்,
மீதானமீதிருந்தோறுறினையுங் கடந்தமிக்க வனுப
வம்விளக்கவினைவில்வருவாயே. (௩)

புதியதமிழ்க்கிரங்குதிருவருட்கருணையென்றன்
புத்திதனக்கெட்டுமட்டும் புன்மொழியாற்புனைந்
தேன் பதியமனய்வந்தது வும்வாராதுமுணர்ந்தோன்

பாரிலுளோர்சொல்மொழியும்பலபலகேட்டுள்ளேன்,மூதிகதிருஞ்சுழியெனுமுக்கண்ணுடையாயெந்தன்மட்டிலும நின்றனனருளைவைத்திடிற் குன்றிடுமோ, நதிதிகழ்செஞ்சடையுடையாய்நான்மறைக்குமரியாய் நங்கையொருபுறத்திலுளாய் நாடிவருவாயே. (ச)

வட்டமிடுமெபிரணவமாமந்திரத்தின்பொருளாய் மனத்தினுக்குமவாக்கினுக்குமதியாது வளர்ந்தே, நட்டநடுவாயில்ங்கிநடம்புரியும்பெருமா நானிலத்துளோர்சிலரால்நகைத்திடவும்பெற்றேன், பட்டமரத்துக்கிணையாயப்பலன்சிறிதுமுணரேன் பன்னிரண்டும்பதினுறுய்ப்பார்தொருக்கால்மகிழக், கட்டளையிட்டாயது போற்கலந்தருளிநிலையிற்களித்தபதத்தொண்டுசெயக்காட்டவருவாயே. (ரு)

குடிலைமுதற்பலபலவாங்கோலமதாயெல்லாங்கூடிதனிச்சுடருருவாய்க்குவிந்துநடமாடுமெ, படியதனிலேறிட நின்பயனருளினடிக்கீழ்பத்திசெயும் படிக்கெனையும்பணித்தருளவேண்டுமெ, துடியிடையாளுட ன் விடைமேறருேன்றி யெழுந்தருளத் தொழு[illegible]மெளியேற்கிரங்கி மனத்துயரகற்றவேண்டும், [illegible]டியவனேடையன்பணியநீண்டசிவக்கொழுந்தே [illegible]ன்[illegible]ால்வந்தடைந்தெனுளம் நிலைக்கவருவாயே. (சு)

அன்னியமொன்றில்லா திங்கெல்லாந்தன்வய மாயடக்கியடியாரிடத்தே யமர்ந்திடுமெம்மரசே, சென்னியுறுமலர்த்தேனோர் சிறிதுகொண்டவன்பர் சிந்தனையற்றருளதனிற் றிகழுகின்றுளி யேன், கன்னியர்பாலுளமெலிந்தேன கவலைபலவானேன் கங்குல்பகலறியாதேகலங்குகின்றேனினனம், என்னியல்பெலாமுணர்வா யெனக்கருளைப் புகல்வாய் யிதுதருணமதுதனிலு மிரங்கிவருவாயே. (எ)

விஞ்சையொருமூன்றதிலுமவெவ்வேறதாகி விரிந்திடினுஞ்சாகாககாலவேகாததலையிப், பஞ்சைதனக்குமமுணர்ததிப்போகாதபுனலின் பகருவத்திலேயமருமபாங்கினையுங்காட்டி, நெஞ்சையொருவழிநிறத்தியனுபவவானந்த நிலையதனுள்ளாக்குதற்காய்நின்பால்வந்தடைந்தேன, செஞ்சடையிலிளமதியமிலங்கிடச்சிற்சபையிறறீர்கக நடமபுரிமுதலாந்தேவவருவாயே. (அ)

அடிமுடிகண்டுணர்வரிதாயனந்தவிதமாகியன்பர்கடிவிளங்குகினறவறிவினுக்குள்ளறிவாய்ப், பிடியெனும்காலங்குலத்தாலெத்தவமுமபெற்றுப் பெரியோர்கட்கணுவேனும்பிரியமவரநடவாக், கொடியனென்றன் மட்டினுஞ்சற்றிரங்கியருளிலையேற்

குவலயநதோர் சொல்மொழிபோற்குன் றுமறியேன், பொடிதவழுமபடிநடஞ்செய்பூங்கழ ற்காளாக்கிப்புனசெயலைததவிர்த்தருளைப் புகட்ட வருவாயே. (௬)

பதவியெலாம் பெற்றவர்பாற்பரிமளிக்குமலரோ பழகநினைந்தெழுவோர்க்கும பயனருளும்பயனே, மதலைமொழிக்குமிரங்கும வழகககமெனறு லெளி யேன்மட்டினுமிங்கிரங்காத வஞ்சகமுமுணரேன், முசனுளபல்கணங்களுக்குங் கணததலைவர்முதலா முதல்வருக்குமுதலாகி முயனறநெலாமளித்தே, யுதவிசெயுந் திருவருளென்மட்டினு முண்டென் றேறுண்மைதவறுதவணமுணர்த்தவருவாயே.

திருவருட்சகாயம்.

வெண்பா.


எங்குநிறைநந்திருக்குமேதமிலாச்சித்தர்குழாங் தங்கருகைகயினிற்றேற்றுரோ—விங்குமுயர் சித்தர்நம்வந்தெமக்குச்செப்பாரோவையவோ இத்தலத்திலேழைமையின்முன்னே.

திருவருட்சகாயம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



சென்னைமாநகரம்

காசிவிஸ்வநாதர்மீது

பதிகங்கள்.

இவை

திருக்குருகூர்

ஸ்ரீமத் - ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருள,

அங்கம்பாக்கம்,

முனிசாமிமுதலியாரவர்களாலும்

நாராயணசாமிமுதலியாரவர்களாலும்

சென்னை:—

இந்து யூனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

விஜய௵ கன்னிரவி.

உ

சிவமயம்.

சிறப்புக்கவி.

அஷ்டாவதானம்,

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

நேரிசைவெண்பா.

ஒப்பரிய நற்குருகை யோகசிவ யோகியெனுஞ்,
செப்பரிய ஞானசித்த தேசிகன்சொல் — லிப்பதிகம்
பெற்றாரு நாடோறும் பேருலகி லன்புடனே
கற்றாரு மற்றார் கவி.

சிவமயம்.

சென்னைமாநகரக்

காசிவிஸ்வநாதர்மீது

பதிகங்கள்.

கலிவிருத்தம்.

திருவருட்சகாயம்.

அளவிடாச்சுகமோவடியார்க்குறும்
புளகமோவெனப்புந்தியிலுற்றவன்
வளம்பெறுந்திருச்சென்னைவடபுறம்
இளமையாம்விசாலாட்சிக்கினியனே. (க)

முப்பழங்கனியின்ரசமோவென
இப்பிறப்பிலிணையடிக்காக்கிட
எப்பவுந்துதித்தேத்திடுஞ்சென்னையில்
ஒப்பிலாவன்னபூரணிக்குடையனே. (உ)

மடையிலாதருள்வாரிதியோவன்பர்
புடைநெருங்கும்புலவர்கட்கின்புறும்
நடைபயிற்றிடுஞ்சென்னையினுடிய
கொடையருள்விசாலாட்சிக்கொழுநனே. (ங)

கறந்தபாலினைக்காச்சுஞ்சுவையதோ
இறந்திடாவடியார்க்குளிணக்கமோ
திறமிகுந்திடுஞ்சென்னைபாலுத்தாம்
அறம்வளரன்னபூரணிக்கன்பனே. (ச)

விண்ணிறைந்துவிளங்குமமுதமோ
கண்ணிறைந்தபெருங்களிப்போவருட்
பண்ணிறைந்தபழையநற்சென்னையி
லுண்ணிறைவிசாலாட்சிக்கொருத்தனே. (௬

தூலநீங்குமுன்றொடருமடியர்க்கே
சீலநல்கியச்சிந்தையுள்வாழ்பவன்
ஞாலம்போற்றுநலஞ்செறிசென்னையில்
கோலவன்னபூரணியின்கொழுநனே. (௭

கற்றவருளத்தோங்குங்கனகமோ
மற்றவரறியாதமலைவரோ நா
குற்றந்தீர்க்கெனைக்கொண்டிடுஞ்சென்னையில்
நற்றுணைவிசாலாட்சியினன்பனே. (௮

கருணையோங்கியகங்கைப்பிரவாகமோ
தருணமன்பனைத்தாங்கிடுமேருவோ
மருளகற்றியமாதிருசசென்னைவாழ்
அருணிறையன்னபூரணிக்கன்பனே. (௯)

காவுநீக்கியகன்னியர்கட்குளே
விரவுமானந்தவெள்ளப்பெருக்கமோ
பரவுஞ்சென்னைப்பதியதிலுத்தமத்
தாவமாவிசாலாட்சிககமுகனே. (௧௦)

கன்னலின்சுவையோகண்டுக்கட்டியோ
வென்னமாதவர்க்கின்பமருள்பவன்
சென்னைமாநகரின்வடபால்வளர்
அன்னபூரணிமேயாடமாண்ணலே. (௧௦)

திருவருட்சகாயம்.



எழுசீர் விருத்தம்.

திருவருட்சகாயம்.

என்றுமுன்னடியேகடைப்பிடித்தியற்றுமெளியனேனுனை முழுதுணர்ந்தும், நன்றெனக்கருளியடியரோடெனையுநாட்டிடு நாளுமெந்நாளோ, அன்றுநின்றொண்டர்க்கருளினவெல்லாமளவிலாதிலொருசிறியேன், இன்றும்வந்தடைந்தேன்சென்னையின்வடபாலிலகியவிசுவநாயகமே. (க)

எண்ணிடுந்தோறுநின்னடித்துணையேயிறுகவும்பிடித்திசைத்திட்ட, பண்ணதும்பலதாயநின்சமுகத்தேபகர்ந்தனன்பதிவதெந்நாளோ, மண்ணிலுன்னடியார்க்கனந்தமும்வழங்குமண்ணலேயதிலொருசிறியேன், நண்ணினேன்சென்னைநகர்தனில்வடபானலகியவிசுவநாயகமே. (உ)

சுளித்திடுந்தோறும்நின்னடித்துணையைக்கைப்பிடித்தேனெனகணித்தே, வெளிப்படப்பலவாறுலகினில்விரிதேன்வீடமர்நாளுமெந்நாளோ, அளித்தநின்னருளையகத்துளேயடக்கியமாந்தனரதிலொருசிறியேன, சுளித்திடாதருள்வாய்சென்னையின்வடபாறுறுலங்கிடுமெவிசுவநாயகமே. (ங)

தனிதநிருந்தொன்றிற்சாரும்போதுனதுதாடுதித்தியற்றிமதமற்றி, அனிதநியமுளோர்போலுனைமறந்தறியேனடியரோடிசைப்படுதெந்நாளோ, பனிப்படுமெடியர்துயரொலாமகற்றும்பரமனேயதிலொருசிறியேன், இனித்துணையடைந்தேன்சென்னையினவடபாலிலகியவிசுவநாயகமே. (ச)

அருந்திடும்போதுன்னருட்செயற்கிரங்கியருந்தினேனலுவலிற்பலவாய்ப், பொருந்திடும்போதுமுனைமறந்தறியேன்பூங்கழலருள்வதெந்நாளோ, விருந்திடூர்க்கர்முதலுளதொண்டர்விருப்புமுநதீர்த்தவாசிறிய, வொருவன்வந்தடைந்தேன்சென்னையின்வடபாலோங்கிடுமவிசுவநாயகமே. (ரு)

கூறறினுங்கொடியகொடுமையேனெனினுங்கொண்டநின்னிருபதந்தமையே, ஏற்றினேன்கணமுமறந்தறியாதவெளியனேற்கிரங்கலெந்நாளோ, போற்றியேபணியும்புலவர்கட்குள்ளேபுலைத்

தொழில்புரியுமிச்சிறியேன், சாற்றுவதுணர்வைசென்னையின்
வடபாற்றழைத்திடும்விசுவநாயகமே. (கூ)

காலமேவீணாய்க்கழித்துளேனெனினுங்கர்த்தநின்னருள்த
னிற்படிய,ஞாலமேகொண்டிங்குறைத்ததுமறிவைநல்லருள்தரு
வதெந்நாளோ, சீலமேயுடையசெல்வர்கட்கருளுநதேசிகாவதி
லொருசிறியேன், பாலருட்சென்னைநகரினில்வடபாற்பதிந்திடு
ம்விசுவநாயகமே. (எ)

மாதர்களிடத்துமண்ணினுந்தனத்துமனந்தளர்ந்திழியினுமு
னையே, ஆதரவென்றேனதனையுமறிவையடியனுக்கருள்வதெந
நாளோ,கோதகலடியர்குழாங்களுக்கருளுங்கொற்றவாவறிவிலா
ச்சிறியேன்,சாதலுமழகோசென்னையினவடபாற்றழைத்திடும்வி
சுவநாயகமே. (அ)

மலையினும்வனத்துமாகுகையிடத்தும்வஞ்சனேனலைந்து
ஏம்வறண்டேங், கலையினைதென்றேயறிந்திடாக்கொடியேன்கழல
மர்நாளுமெந்நாளோ,சிலைநுதற்றிருவெண்காடமைக்கருளுந்தே
வனேசிறியரிற்சிறியேன், அலைந்திடாதடைந்தேன்சென்னைய
ன்வடபாலமர்ந்திடும்விசுவநாயகமே. (கூ)

உள்ளமேமெலிந்தேனுண்டியால்பருத்தேனுத்தமர்க்கின்ட
றென்றினமுங்,கள்ளமேயுடையேனுய்னுமுனதுகழலைதொழுநா
ளுமெந்நாளோ,தெள்ளியவமுதேயமுதினுட்சுவையேதே பர்
நகர்கள்செழிக்கும், வள்ளலேசெனனைமாநகர்வடபாலட ரவிய
விசுவநாயகமே. (க0)

திருவருட்சகாயம்.



வெண்பா.

எங்கு நிறைந்திருக்கு மேதமிலாச் சித்தர்குழாந்
துங்கக் குருகையினிற் றோற்றுரோ—விங்குமுயர்
சித்தர்களும் உந்தெமக்குச் செப்பாரோ வையவோ
இத்தலத்தி லேழையின்முன்னே.



திருவருட்பிரசாதம்

திருக்கழுக்குன்றப் பதிகங்கள்.

இவை

திருக்குருகூர்

ஸ்ரீமத்-ஞானசித்தசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியவை

சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை

[illegible]

மஹாளளஸ்ரீ

[illegible]பேட்டை

இராமநாதமுதலியார்

அவர்களால்

சென்னை.

இந்து யூனியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

விஜய வருஷம் தை மீ

சாத்துகவிகள்.

புரசை ம-ள-ள-ஸ்ரீ அஷ்டாவதானம்

சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கரும்

திருக்குருகை

ஸ்ரீமத் - ஞானசித்தசுவாமிகள்

திருவடிச்சம்பந்தருமாகிய

திருவாரூர். சின்னசாமிபிள்ளை அவர்கள்

இயற்றியது

செங்கமலத் தயன்மால் முதலாகிய தேவரெலாந்
　திருவருள் புரியெனத் தினந்தினம் பரவுந்
திங்கணதியாவந் திகழுங் கழுகாசலனார்
　திருவடியிணை மலர்க் கன்புசெறிந்தினிது
மங்கலமோங்கு தமிழ்க்கவிமாலை புனைந்தணிந்தாய்
　மதியணவிய மதில மாளிகைசூழ் குருகைப்
புங்கவன் ஞானசித்தப் புனிதன் பெருமாதவருட்
　புரிவொடு துதி புரி பொற்பமா புண்ணியனே.

உரையாசிரியர் - மகாவித்வான்

காஞ்சிபுரம் - சபாபதிமுதலியாரவர்கள் குமாரர்

பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள்

இயற்றியது.

காலிரண்டையுங்கட்டச்சுழினையில்
  காணுமாமபெருஞ்சோதியைக்கண்டபின்
மேலதாமமிர்தத்தைதககளிப்புடன்
  மேன்மையோடுண்டமெய்த்தவர்போற்றிடும்
சீலயாதிருஞானசிரககுரு
  செப்பினாபண்டைபதிகத்தையே
நாலிரண்டோடிரணடுருவாமெனும
  நாதனாகியவேதகிரீசர்க்கே.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

இருக்குமறைமுதலாங் கினை மேதகுகொழுதுவர
  வினை யில தொரு பதி யிருந்துவைகியதோர்
திருக்கழுக்குன்றமிசை பல சிர்தருநற்பதிகந்
  திக ழுற மிக நயஞ் சிறக்கவேசொற்றனால்
பெருக்கமிகுந்திடவோ ருறை பேர்பெருங்குருகையினிற்
  பிர பல தவர் புகழ் பேழ்சிவயோகியென
இருக்குமுனிவரனா கிய வெழிலுறுஞானசித்த
  னென விவ னுறை தரு மெங்கள்குருமணியே.

திருவையாறு - விதவான்

அ - முத்துசாமிபாரதியாரவர்கள்

இயற்றியது.

புலிபுகழுங்கழுக்குன்றத்தமர்ந்துயிர்கட்கருள் பரமன்பொற்றாள்மீது, தவர்பரவுஞானசித்ததேசி கோத்தமன்வனைசெந்தமிழ்ப்பாமாலை, தவநிதியமி ணிதுதவுமரந்தைமுதலகளைந்திடு மெய்ஞ்ஞானநல குமம, பவமுருக்குமபேரின்பமுத்திதருமெனிலதன் சீர்பகரற்பாற்றோ.

திரிசிரபுரந் தையக்காரசாமியென்னும்

ஸ்ரீமத் - பொன்மலைச்சாமிகள் சிஷ்யனும்

ஸ்ரீலஸ்ரீ - ஞானசித்த சுவாமிகள்

திருவடிச்சம்பந்தருமாகிய

பூவிருந்தவல்லி

செங்கல்வராயமுதலியாரவர்கள்

இயற்றியது.

பரமெனுமொன்றதுவேயண்டம்பலதினுமாய்பரவி[ந்தே
படைத் தளித் தொழித்திடும் பான்மையதென் றுணர்
திரம்பெருமாதவர்கள் தினம்சேர்கழுக்குன்றமதிற்
திருவடி பதித் துள சித்தருக்கன்புடனே
உரம்பெருமாபதிகமுறைத்துவப்புடனேயணிந்தான்
உயர் திருக் குருகையி லுதித்தடியார்கடொழ
வரம்பலதுமளிப்போன்வரதன்சிவஞானசித்தனை
மல ரடி தொழ வெனை வைத்திடுந்தேசிகனே.

உ

திருவருட்சகாயம்.

திருக்கழுக்குன்றப்பதிகம்.

திருவருட்சகாயம்.

புதுமலர் தினங்கொடு புகழ்கழுக்குன்றினில்
சதுர்முகன் சுதர் துதித்தாடுந்தனமையன்
எதுவிருடபினுமதற்கிரங்குவானெழில
விதுபணிந்திடவருள்வேதகிரீசனே. (க)

சந்தமகிற்குங்குமந்தழைத்தெங்கணுங்
கந்தங்கமழ்ந்தொளிருங்கழுக்குன்றினில்
அந்தமோடமரருக்காக்கநல்கவே
விந்தைசெய்தோங்கிடும்வேதகிரீசனே. (உ)

பங்கயமலர்தொறும்பரவுமன்னமுஞ்
சங்கமும்புட்களுஞ்சார்கழுக்குன்றினில்
மங்கையம்பெண்ணினல்லாளுடன்மகிழ்
வெங்கணுங்காட்டியவேதகிரீசனே. (ங)

விண்ணவர்தொழவருள்மிகவுஞ்செய்தேயன்பர்
பண்ணதிஞற்றினம்பணிகழுக்குன்றினில்
பெண்ணினல்லாளுடன்பெட்புறுகின்றவன்
வெண்மலைநிகர்தரும்வேதகிரீசனே. (௪)

நடமிடும்வெள்விடைநங்கழுக்குன்றினில்
சுடர்வடிவுடனமர்தொண்டருக்கின்புறக்
கடல்கடைந்தமரராக்காத்ததிஞலெழும
விடமமுதெனவுணுமவேதகிரீசனே. (௫)

கடிகமழ்மாவிளங்கமுகுநற்கன்னலும
நெடிகுயிலினங்களும்நேர்கழுக்குன்றினுக்
கடியனையும்பணிததாட்கொளவேண்டினேன்
வெடிகமழுந்திருவேதகிரீசனே. (௬)

பொருத்தமுள்ளன்பர்க்குட்புளகமெழும்படித்
திருத்தவந்தெழுந்திடுந்திருக்கழுக்குன்றினில்
வருத்தமுளோர்க்கருள்மன்னகிருபைசெய்
விருத்தமுமாய்வளர்வேதகிரீசனே. (௭)

ஏடெதிரோற்றியவெங்கள்சீகாழியன்
பாடலுக்கிரங்கிடும்பணைவநற்குன்றினில்
தோடணிபெண்ணினல்லாளுடன்தோன்றிமேல்
வீடதிலேற்றிடும்வேதகிரீசனே. (௮)

நடைபயில்மயிலினம்நாடுஞ்சோலையும்
புடைவயல்களுமதிற்பொலியுநாளையும்
தடையறநாடொறுஞ்சார்கழுக்குன்றினில்
விடைதனில்வருபவன்வேதகிரீசனே. (௯)

கரும்பினுமினியநங்கழுக்குன்றிற்றனை
பெருகுறவிரும்புகழ்பெண்ணினல்லாளுடன்
சுரும்பமர்கொன்றையஞ்சோதியாரடி
விரும்பினர்க்கேயருள்வேதகிரீசனே. (௧0)

திருவருட்சகாயம்.



திருவருட்சகாயம்.

மருந்துக்கேயொருமெய்ம்மொழியுளையேன்
மன்னுமாருயிர்வவ்விடுங்காலன்
விருந்துக்கேயெனவீண்பொழுதாக்கி
விம்முகின்றவரிற்பெருவிழலேன்
குருந்துக்கேயெழுந்தருளியன்னவர்பால்
கூறிடும்நெறிகூட்டிதலரிதா
பருந்துக்கேதயைபுரியவந்தருளும்
பழமையார்திருக்கழுக்குன்றத்தானே. (௧)

தொந்திக்கேபலவூண்வகையதனாற்
றார்த்துளேனருட்டிலங்குவர்தமையுஞ்
சந்திக்கேனிணம்தட்டழிகின்றேன்
தாரகமுன்னையன்றியொன்றறியேன்
நந்திக்கேயருணல்கியுங்குருந்தில்
நண்பனுக்கருணயந்திடுமதுபோல்
சிந்திக்கேனெனினுந்தயைபுரியும்
திருக்கழுக்குன்றச்செழும்பதியானே. (௨)

திரிதற்கேமனஞ்சிதறிநல்லன்பர்
சிரித்தறகேயிடமாகுமிவ்வுலகில்
எரிதற்கேயுறுமீனாகட்குள்ளே
யிழிந்துளேனெனககிரங்குககண்டாய்
விரிதற்கேயுறுமவெண்மலைநின்று
மேமபடுங்குருந்தடியினுள்ளமர்ந்து
புரிதற்கேயுறுந்தவமுமென்பாற்செய்
